| | | |
|---|---|---|
| | நாமக்கல் மா. ஆ. நி.<br><br>Namakkal D.R.B. | **கூட்டுறவுச் சங்கங்களின்**<br>**நாமக்கல் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்**<br>**கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்,**<br>**அறை எண் 2, இரண்டாம் தளம்,**<br>**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**<br>**நாமக்கல் மாவட்டம்.** |

**விளம்பர எண்– 06/2020** **நாள்–15.06.2020.**

நாமக்கல் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளுக்கு கீழே குறிப்பிட்டுள்ள விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பதவிகளுக்கான காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்கான நேர்முக தேர்விற்கு **15.07.2020 அன்று மாலை 5.45 மணி** வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**குறிப்பு– விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பதவிகளுக்கு தனித் தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.**

| வ. எண். | பதவியின் பெயர். | சங்கத்தின் வகை | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | சம்பள ஏற்ற முறை. |
|---|---|---|---|---|
| 1 | நியாயவிலைக்கடை விற்பனையாளர் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் | 86 | 1. தொகுப்பு ஊதியம் ரூ.5000/– நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2. ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ.4300–12000. |
| | | வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் | 1 | |
| | | மொத்தம் | 87 | |
| 2 | நியாயவிலைக்கடை கட்டுநர் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் | 1 | 1. தொகுப்பு ஊதியம் ரூ.4250/– நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2. ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ.3900–11000. |
| | | வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் | 1 | |
| | | மொத்தம் | 2 | |

## 2) காலிப்பணியிடங்களுக்கான பகிர்மானப் பட்டியல்–

| பதவி | வகுப்பு வாரி இடஒதுக்கீடு | | | | | | | மொத்த காலிப் பணியிடம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பொது (GT) | பிற்படுத்தப் பட்டோர் (BC) | பிற்படுத்தப் பட்டோர் (இஸ்லாமியர்) BCM | மிகவும் பிற்படுத்தப் பட்டோர் / (சீர்மரபினர்) (MBC/DC) | ஆதிதிராவிட வகுப்பினர் (SC) | ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியர்) SC(A) | பழங்குடியின வகுப்பினர் (ST) | |
| நியாயவிலைக் கடை விற்பனையாளர் | 26 | 22 | 3 | 18 | 14 | 3 | 1 | 87 |
| நியாயவிலைக் கடை கட்டுநர் | 1 | 1 | – | – | – | – | – | 2 |

**நிபந்தனைகள்: –**

1) இத்தெரிவுக்கு நடைமுறையில் உள்ள தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வுக்குப் பின்பற்றப்படும் இட ஒதுக்கீடு மற்றும் இன சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் பின்பற்றப்படும்.

2) நியமனத்தின்போது தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் போதுமான அளவு இல்லாதபோது பெண்களுக்கான ஒதுக்கீடு எண்ணிக்கையைத் தகுதி வாய்ந்த அதே வகுப்பினைச் சார்ந்த ஆண்களைக் கொண்டு நிரப்பப்படும்.

3) ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் (கண் பார்வையற்றோர் தவிர) மற்றும் முன்னாள் ராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், இந்த நியமனத்தின் போதும் பின்பற்றப்படும்.

4) மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இத்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தில் மேல் முறையீடு உரிய காரணங்களுடன் செய்யப்பட வேண்டும். அதற்குப்பின் பெறப்படும் முறையீடுகள் எதுவும் ஏற்கப்படமாட்டாது.

5) பார்வைத்திறன் அற்ற நபர்கள் விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க இயலாது.

6) காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டது.

## 3) முக்கிய தேதிகள்–

| | | | |
|---|---|---|---|
| அ) | விளம்பர அறிவிக்கை நாள் | – | **15.06.2020** |
| ஆ) | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் | – | **15.07.2020 மாலை 5.45 மணி வரை** |

**4) தகுதிகள்—**

**அ) வயது (01.01.2020 அன்றுள்ளபடி)**

**(01.01.2002 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்).**

| வ.எண் | விண்ணப்பதாரர்களின் இனவகைகள் | குறைந்த பட்ச வயது (முடிவடைந்திருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1 | ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட வகுப்பினர்(அருந்ததியினர்), பழங்குடியின வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | 18 வயது | வயது வரம்பு இல்லை. |
| 2 | ஏனையோர். | 18 வயது | 30 வயதுக்குள் |

**குறிப்பு—**

அ) ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியினர்), பழங்குடியின வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) தவிர ஏனைய வகுப்பினை சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயது வரம்புச் சலுகை பெற தகுதியுடையவராவார்கள்.

ஆ) ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியினர்), பழங்குடியின வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) தவிர ஏனைய வகுப்பினை சார்ந்த முன்னாள் இராணுவத்தினருக்கு அரசாணையின்படி வயது வரம்பு சலுகை வழங்கப்படும்.

இ) ஏற்கனவே ஏதேனும் ஒரு பிரிவு/ பணி/ பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னாள் இராணுவத்தை சேர்ந்த விண்ணபதாரர் முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெற முடியாது.

{(தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 3(i) (vii) }.

**ஆ) கல்வித் தகுதிகள்—**

1) நியாய விலைக்கடை விற்பனையாளர்கள் – பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி (+2) அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதியினை பெற்றிருக்க வேண்டும்.

2) நியாவிலைக்கடை கட்டுநர்கள் – பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**இ) தமிழ் மொழியில் தகுதி—**

விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிப்பு வெளியிடும் நாள் அன்று போதுமான தமிழ் அறிவு பெற்றிருக்க வேண்டும்.

**ஈ) உடற் தகுதிச் சான்றிதழ்—**

1) பணி நியமனத்திற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்கு குறையாத மருத்துவரிடம் உடற்தகுதிச் சான்றிதழினை பெற்று சம்பந்தப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தில் பணியில் சேரும் போது சமர்ப்பிக்க வேண்டும்.

2) மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய உடல் ஊனம் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவிகளுக்கான பணியினைச் செய்வதற்கு தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவ குழுமத்திடமிருந்து பெறப்பட்ட சான்றிதழினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**5) தெரிவு செய்யும்முறை—**

அ) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் இவ்விளம்பர அறிவிக்கை மூலம் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களில் தகுதி பெற்றவர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

ஆ) நேர்முகத் தேர்வுக்கு அழைப்புக் கடிதம் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்ட தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகத் தேர்விற்கு அழைப்புக் கடிதத்தில் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் சான்றிட்ட நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

இ) நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும், இது தொடர்பாக எந்த உரிமையும் கோர இயலாது. நேர்முகத் தேர்வு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணி நியமனம் கோர உரிமை கிடையாது.

ஈ) நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

உ) விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, இடஒதுக்கீடு மற்றும் இனச்சுழற்சி முறை ஆகியவை பின்பற்றப்பட்டு காலிப்பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டு பணியிடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

ஊ) விண்ணப்பதாரர்கள் தாங்கள் எந்த கூட்டுறவு நிறுவனத்தின் நியாய விலைக்கடைக்கு பணியமர்த்தப்பட வேண்டும் என்பதற்கான விருப்பத்தினை நேர்முகத் தேர்வின் போது தெரிவிக்க வேண்டும். எனினும் விண்ணப்பதாரர்கள் முன்னுரிமை வரிசையில் அவர்கள் தெரிவித்திருந்த சங்கங்களுக்குத் தேர்வு செய்யப்படுவதற்குத் தேவையான மதிப்பெண், தரவரிசை, இடஒதுக்கீடு, இனச்சுழற்சி தர வரிசை ஆகியவற்றை பெற்றிருக்காத நேர்வில், விண்ணப்பதாரர்களின் முன்னுரிமை வரிசைப்படி அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய இயலாத நிலையில், மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் வேறு சங்கத்திற்கு விண்ணப்பதாரரை ஒதுக்கீடு செய்யும். ஒதுக்கீடு செய்த பின்னர் அவ்வொதுக்கீட்டை மாற்ற கோரும் எந்த ஒரு கோரிக்கையும் விண்ணப்பதாரர்களிடமிருந்து ஏற்கப்படமாட்டாது.

## 6) <u>விண்ணப்பக் கட்டணம்–</u>

அ) விற்பனையாளர் பணியிடத்திற்கு விண்ணப்பக் கட்டணம் ரூ.150/– (ரூபாய் நூற்று ஐம்பது மட்டும்). கட்டுநர் பணியிடத்திற்கு விண்ணப்பக் கட்டணம் ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்).

ஆ) விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடியின வகுப்பினர், அனைத்து வகுப்பைச் சார்ந்த மாற்றுத் திறனாளிகள் மற்றும் அனைத்து வகுப்பைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோர்களுக்கு விலக்களிக்கப்படும்.

இ) மேற்படி விண்ணப்பக் கட்டணம் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் அதன் கிளைகள் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் 'மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், நாமக்கல் மாவட்டம்' (District Recruitment Bureau, Namakkal District Payable at Namakkal) என்ற பெயரில் வரைவோலையாக (Demand Draft) எடுக்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் எண் மற்றும் விண்ணப்பிக்கப்படும் பதவிக்கான பெயர் மற்றும் விண்ணப்பதாரரின் பெயர் ஆகியவை வரைவோலையின் பின்புறம் எழுதப்பட வேண்டும்.

ஈ) விண்ணப்பக் கட்டணத்திற்கான வரைவோலை இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

உ) ஒரு முறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பி அளிக்கப்பட மாட்டாது.

## 7) தடையின்மைச் சான்றிதழ்.

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே பணியாற்றுபவர்களாக (நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ) இருக்கும் பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து தடையில்லாச் சான்றிதழை நேர்முகத் தேர்வின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

## 8) விண்ணப்ப படிவங்கள் கிடைக்கும் இடங்கள்–

மேற்படி விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களை கீழ்கண்ட இடங்களில் அலுவலக வேலை நாட்களில், வேலை நேரத்தில் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

1. நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்,
   எண்.69, திருச்செங்கோடு ரோடு,
   நாமக்கல் – 637 001,
   தொலைபேசி எண்.04286/ 281379, 280174.

2. நாமக்கல் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி,
   கோட்டை மெயின் ரோடு (உழவர் சந்தை அருகில்),
   நாமக்கல்.
   தொலைபேசி எண்.04286–220245.

3. இராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்,
   எண்.8, சின்னமெட்டு வீதி,
   இராசிபுரம் தாலுாக்கா,
   நாமக்கல், தொலைபேசி எண்.04287/ 222224, 225011

4. திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்,
   எண்.9, கச்சேரி வீதி, பரமத்தி வேலூார் ரோடு,
   தபால் பெட்டி எண்.26, திருச்செங்கோடு – 637 211,
   தொலைபேசி எண். 04288/ 252359, 252559.

5. பள்ளிபாளையம் உழவர் பணிக் கூட்டுறவு சங்கம்,
   சங்ககிரி மெயின் ரோடு, பள்ளிபாளையம் (அ),
   கொமராபாளையம் (வ), நாமக்கல் – 638006.
   தொலைபேசி எண். 04288–240412

6. எஸ்.1391 பரமத்தி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்,
   வேலூர் மெயின் ரோடு, பரமத்தி,பரமத்தி வேலூர் (வ), நாமக்கல் – 637207.
   தொலைபேசி எண். 9443833999.

7. நெ.622 மோகனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்,
   கடை வீதி, மோகனூர், மோகனூர் (வ),
   நாமக்கல் – 637015. தொலைபேசி எண். 6381738205.

8. எஸ்.என்.265 சேந்தமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்,
   புதன் சந்தை வழி ( BDO அலுவலகம் அருகில்), சேந்தமங்கலம்.
   நாமக்கல்–637409. தொலைபேசி எண். 04286–270595.

9. எஸ்.1238 நாமகிரிப்பேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்,
ஆத்தூர் மெயின் ரோடு, பழைய ஊராட்சி அலுவலகம் எதிரில்,
நாமகிரிப்பேட்டை , இராசிபுரம் (வ),
நாமக்கல்– 637406. தொலைபேசி எண். 04287–242538.

10. வெண்ணந்தூர் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி,
இராசிபுரம் மெயின் ரோடு, வெண்ணந்தூர்,
இராசிபுரம் (வ), நாமக்கல் – 637505.
தொலைபேசி எண். 04287–264305.

11. எஸ்.514 வரகூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்,
துறையூர் மெயின் ரோடு, வரகூர், சேந்தமங்கலம் (வ),
நாமக்கல் – 637021,
தொலைபேசி எண். 04286–264526.

12. எஸ்.என்.210 கொல்லிமலை மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவு கடன் சங்கம்
(கொல்லிமலை லேம்ப் சங்கம்),
செம்மேடு , கொல்லிமலை (வ)
நாமக்கல் – 637411. தொலைபேசி எண். 04286–247445.

## <u>9) விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய இணைப்புகள்–</u>

அ) விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப படிவத்துடன் கீழ்கண்ட சான்றளிக்கப்பட்ட சான்றிதழ்களின் நகல்களை இணைத்து அனுப்ப வேண்டும்.

1) பிறந்த தேதிக்கான சான்றிதழ்.

2) சாதி சான்றிதழ்.

3) கல்வித் தகுதிச் சான்றிதழ்.

4) தமிழ் மொழியில் தகுதி சான்றிதழ்.

5) நன்னடத்தை சான்றிதழ்.

6) கடைசியாக கல்வி பயின்ற நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தை சான்றிதழ்

7) உடற் தகுதி சான்றிதழ்.

8) மாற்றுத்திறனாளிக்கான சான்றிதழ்.

9) ஆதரவற்ற விதவைக்கான சான்றிதழ்.

10) முன்னாள் படை வீரருக்கான சான்றிதழ்.

11) தடையில்லாச் சான்றிதழ்.

12) தமிழ் வழியில் கல்விப் பயின்றதற்கான சான்றிதழ் (Person studied in Tamil Medium).

ஆ) சான்றளிக்கப்பட்ட சான்றிதழ்கள் (Attested copies) இணைக்கப்படாமல் அனுப்பப்பட்ட விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**10) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பெறுதல்–**

விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன்பு கீழ்கண்டவற்றை உறுதி கொள்ள வேண்டும்.

அ) விண்ணப்பப் படிவங்கள் பந்து முனை பேனா (Ball Point Pen) கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆ) விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணப்பதாரர் கட்டாயம் கையொப்பம் செய்தல் வேண்டும்.

இ) விண்ணப்பதாரரின் கையொப்பம் இல்லாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஈ) விண்ணப்பப் படிவத்தில் அனைத்து கலங்களும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

உ) விண்ணப்பப் படிவத்துடன் விண்ணப்பக் கட்டணத்திற்கான வரைவோலை தவறாமல் இணைக்கப்பட வேண்டும்.

ஊ) விண்ணப்பதாரர் அவரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்றை விண்ணப்பப் படிவத்தில் ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒட்டப்பட வேண்டும். தனியாக ஒரு புகைப்படத்தினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

எ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் கீழ்கண்ட முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரிலோ **15.07.2020 அன்று மாலை 5.45 மணிக்கு** முன்னர் கிடைக்கும் படி அனுப்பி வைக்கப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது.

**இணைப்பதிவாளர்/ தலைவர்,**
**மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்,**
**அறை எண்.2, இரண்டாம் தளம்,**
**மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,**
**நாமக்கல் மாவட்டம்.**

ஏ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சுய முகவரியிட்ட ரூ.25/–க்கான தபால் வில்லை ஒட்டிய 24 X 10 செ.மீ. உறையினை இணைத்து அனுப்ப வேண்டும்.

**இணைப்பதிவாளர்/ தலைவர்,**
**மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்,**
**நாமக்கல்.**